**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**...**
**IN THE COURT OF Judicial Magistrate Court, Shencottai**
**STC No.417/2023**

Deposition of the witness for DW1
Name : **சீனிவாசன்**
Father's/Husband's Name :
Age :
Village and Taluk :
Caste and Religion :
Calling :
Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on (02.07.2026)

Accused present

குறுக்கு விசாரணை

புரோ நோட் சம்மந்தமான வழக்கில் நான் பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளேன். அந்த பதிலறிவிப்பில் இந்த வழக்கு காசோலை பற்றி எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். பதிலறிவிப்பு அனுப்பிய தேதி ஞாபகம் உள்ளதா என்றால் 2023. நான் முதல் விசாரணை சாட்சியத்தில் 2019 ஆம் ஆண்டு நிரப்பப்படாத காசோலையை வாதியிடம் கொடுத்தேன் என்ற விவரத்தையும் நான் அந்த பதில் அறிவிப்பில் கூறவில்லை என்றால் சரிதான். புரோ நோட்டை கொடுத்தது சம்பந்தமாக போலியாக உற்பத்தி செய்ததாக கூறியுள்ளதில் அது சம்பந்தமாக காவல்துறையில் புகார் கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை. நான் இந்த வழக்கு காசோலை சம்பந்தமாக புகார்தாரரின் மீது காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். புரோநோட்டையோ, செக்கையோ திரும்ப பெறுவதற்காக உரிமையியல் வழக்கு எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்லி உள்ள விவரங்கள் பதில் அறிவிப்பில் சொல்லி உள்ள விவரங்கள் பொய் என்றால் சரியல்ல.

நான் வாதிக்கு சட்டபூர்வமாக ரூபாய் 4 லட்சம் கடன் வாங்கி உள்ளேன் அதை கொடுக்க வேண்டிய கடமை உங்களுக்கு உள்ளது என்றால் சரியல்ல. நான்

புகார்தாரருக்கு கோடு பி.எஸ்.கார் எனது பெயரில் வாங்கி கொடுத்ததாக சொல்லி உள்ளதில் ரூபாய் ஒரு லட்சம் பணம் புகார்தாரர் எனக்கு கொடுத்தார் அதனை திரும்ப நான் கொடுத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. சட்டத்திற்கு விரோதமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் காசோலை மோசடி செய்த குற்றத்திற்காக தண்டிக்கப்பட வேண்டியவர் என்றால் சரியல்ல.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

S ILAIYARAJA
Digitally signed by S ILAIYARAJA
Date: 2026.07.02 14:03:49 +0530

Judicial Magistrate, Shenkottai